இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 05 – 2008/2009
**LWU 3315/4335/4312** – சர்வதேச சட்டம்
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 2
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 11.12.2008 நேரம்: மு.ப 11.30 – மு.ப 12.10

ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. விசேட இடப்பரப்புகளுக்கு பிரயோகமுடைய சட்டப்பரப்பானது, இடப்பரப்புக்களை கையகப்படுத்துவதனை ஆளும் பொது விதிகளுக்கு புறம்பானவை(விதிவிலக்குகள்) ஆகும். பின்வருவனவற்றில் இருந்து இரண்டினைத் தெரிக. பொது விதிகளில் இருந்து எவ்வாறு பிரயோகமுடைய விசேட விதிகள் வேறுபடுகின்றன என்பதனை ஆலோசிக்க:

   - போலார் இடப்பரப்பு;
   - வான் மற்றும் விண்வெளி;
   - ஆறுகள் மற்றும் கால்வாய்கள்;

   சர்வதேச மற்றும் உள்நாட்டு நியாய சபைகள் ஏதேனும் இருப்பின் அவற்றின் தீர்ப்புக்கள் மற்றும் சர்வதேச பொருத்தனைகள் என்பவற்றினை சான்றுகளாக முன்வைத்து உமது விடையினை ஆதாரப்படுத்துக.

2. "சட்டத்தின் ஆட்சிக்கு தாம் மேம்பட்டவர்கள் என்ற கோரிக்கையினை விட வெளிநாட்டு இறைமையின் கௌரவமானது சட்டவாட்சிக்கு தம்மை அர்ப்பணித்தல் என்பதன் மூலம் மேம்படும் என்பதுடன் அதன் சுதந்திரமானது எதேச்சாதிகாரமாக நியாயாதிக்கத்தை புறக்கணிப்பதைவிட தெரியப்படுத்தப்பட்ட நடுநிலைமை பற்றிய நீதிமன்ற தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்வதனால் மேலான முறையில் உறுதிப்படுத்தப் படுகின்றது. எல்லா குடியியல் நாடுகளிலும் தமது சொந்த நீதிமன்றங்களின் இறைமையானது வழக்கிடப்படக்கூடியதாக ஆக்குதல் என்பது முன்னேற்றகரமான போக்காக காணப்படுகிறது... எம்மாலேயே எமக்கு வழங்கப்படாத விருபாட்டுரிமையை ஏன் நாம் வெளிநாட்டு அரசாங்கங்களின் திணைக்களங்களுக்கும் முகவர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதற்கு எந்த காரணமும் இல்லை..."

   Rahimtoola v Nizam of Hyderabad and another, [1958] A.C 379 at p.418. வழக்கில் Lord Denning.

   இக் கூற்றினை நுணுக்கமாக பகுப்பாய்க. தீர்க்கப்பட்ட வழக்குகளைக்கொண்டு உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(பதிப்புரிமையுடையது)